**Starting time 11.38.A.M.**

# IN THE COURT OF THE SPECIAL SUB JUDGE TO DEAL WITH L.A.O.P. CASES, ARAKKONAM.

## O.S. No.29/2019

Deposition of **D.W.4** witnesses for defendant Solemnly affirmed by Tr. C. Karthigai Selvam, Senior Bailiff of this court, on 27.01.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : நவநீதம் Husband's Name : முரளி

Address : மகாத்மா காந்தி தெரு, கைலாசபுரம், சாலை, மின்னல் மதுரா, அரக்கோணம் தாலூக்கா, ராணிப்பேட்டை மாவட்டம்.

**Age** : 49

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால், 12-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் எழுத, படிக்க தெரியுமா என்றால், தெரியும். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால், குடும்ப தலைவியாக உள்ளேன். இவ்வழக்கை யார், என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், தனலட்சுமி என்பவர் தாக்கல் செய்துள்ளார், எதற்காக என்று தெரியவில்லை.

2. தாவாவில் எந்தெந்த சொத்துக்கள் சொல்லப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால், தெரியாது. நான் இவ்வழக்கில் எனது பதிலுரையை தனியாக தாக்கல் செய்யவில்லை என்றால், இல்லை. 2-ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள

பதிலுரையை நான் ஏற்றுக் கொள்வதாக எங்கள் தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

3. தாவா சொத்துக்கள் ஆதியில் யாருக்கு சொந்தம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. வாதி, நடேச ரெட்டி, மல்லிகா, 1, 2 பிரதிவாதிகள் குடும்பத்தை பற்றி எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. அவர்களுக்கிடையே சொத்துக்கள் சம்மந்தமாக இருந்த பிரச்சனை பற்றி எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

4. இவ்வழக்கில் 2–ம் பிரதிவாதி அமுதவள்ளி, வாதி தனலட்சுமி மற்றும் 1–ம் பிரதிவாதி நரசிம்மன் ஆகியோர்களுக்கிடையே அவர்கள் குடும்ப சொத்துக்கள் சம்மந்தமாக நடைபெற்ற பரிவர்த்தனைகள், கொடுக்கல், வாங்கல் பற்றி எனக்கு எதுவும் தெரியுமா என்றால், தெரியாது. நான் குடும்ப தலைவியாக இருந்ததால் இவ்வழக்கு சி–அட்டவணை சொத்தினை என் கணவர் என் பெயரில் கிரையம் வாங்கினார் என்றால், சரிதான். நான் இவ்வழக்கில் எனக்காக மட்டும் சாட்சியம் அளிக்கிறேனா அல்லது 5 முதல் 7 வரை பிரதிவாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கிறேனா என்றால், எனக்காகவும், 5 முதல் 7 வரை பிரதிவாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன்.

5. இவ்வழக்கில் வாதி, 1, 2 பிரதிவாதிகள் மற்றும் மல்லிகா ஆகியோர்கள் சேர்ந்து பொன்னுசாமி என்பவருக்கு கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்ததாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது பற்றி எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். அதனால் பொன்னுசாமி என்பவருக்கு கிரையம் செய்துக் கொடுத்த விவரம் தெரியுமா என்றால், தெரியாது.

6. தாவா சி–அட்டவணை சொத்தை கிரையம் பெறுவதற்கு எங்களுக்கு யார் தகவல் சொல்லியது என்றால், 4 முதல் 7 வரை பிரதிவாதிகள் சொன்னார்கள்.

அவர்கள் எனக்கு முன்பே கிரையம் வாங்கினார்களா என்றால், இல்லை, அனைவரும் ஒன்றாக தான் வாங்கினோம். 4 முதல் 7 வரை பிரதிவாதிகள் சொன்னதால் தான் நானும் கிரையம் வாங்கினேன் என்றால், ஆமாம்.

7. தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு மூலப்பத்திரத்தை வாங்கி சரிபார்த்தோமா என்றால், என் கணவர் சரிபார்த்தார். பொன்னுசாமிக்கு கிரையம் செய்த வகையில், ஏற்கனவே செட்டில்மெண்ட் பத்திரத்தில் இருந்த நிபந்தனைகளை மீறிவிட்டார்கள் என எனது பிரமாண வாக்கமூலத்தில் சொல்லியுள்ளதை பற்றி நான் தனியாக பதிலுரையில் எதுவும் குறிப்பிடவில்லை என்றால், சரிதான்.

8. வாதியின் தாயார் மல்லிகா என்பவர் 2013–ம் ஆண்டு காலமான பிறகு தாவா சொத்துக்களில் வாதி, 1, 2 பிரதிவாதிகளுக்கு சட்டப்படி சம உரிமை ஏற்பட்டது என்றும், அவ்வாறான நிலையில் 2–ம் பிரதிவாதி சதி செய்து தாயார் மல்லிகாவிடமிருந்து கிரையம் பெற்ற சொத்துக்களை யாருக்கும் தெரியாமல் 3 முதல் 7 வரை பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்ததே தவறு என்பதால், அந்த கிரையம் சட்டப்படி செல்லாது என்றால், சரியல்ல. எனவே, அதன் பின்னிட்டு என் பெயரில் பெற்றுள்ள பட்டாவும் ரத்து செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

3, 5 முதல் 7 வரை பிரதிவாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending time : 12.00. P.M.

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.01.27 14:15:50 +0530